**SC. No. 51 /2018**

P.W.8 - தாமோதரன்

தேதி: 16.03.2021.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாலாஜா காவல் நிலையம் எதிரில் என்னுடைய ஆட்டோ ஸ்டாண்டு உள்ளது. ஆட்டோ ஸ்டாண்டு எதிரில் உள்ளதால் எனக்கும் வாலாஜா காவல் நிலைய போலிசாருக்கும் பழக்கம் என்றால் சரிதான். போலிசார் ஏதாவது சொன்னால் நாங்கள் செய்வோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் போலிசார் என்னை சாட்சியாக இருக்க சொன்னார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டு தான் சொல்கிறேன் என்ற சங்கதிகள் போலிசார் சொல்லிக்கொடுத்து தான் சொல்கிறேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல.

**<u>SC. No. 51 /2018</u>**

P.W.10 - மோகன்

தேதி: 16.03.2021.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். என்றைய தேதியில் விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவத்தை பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்று சொன்னால் சரிதான். கேள்விப்பட்டு தான் சாட்சியம் அளிக்கிறேன். நான் சொல்வது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் நான் கேள்விப்பட்டதாக சொல்லியுள்ளது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்துபோன சிவா என்னுடைய நண்பர் ஆவார். சிவாவுக்கு நண்பர் என்ற முறையில் நான் சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.